மக்களின் முக்கிய கோரிக்கையான அருகில் உள்ள சங்கரன்கோவிலுக்கும், புளியங்குடிக்கும் முன்பு இயக்கப் பட்ட 8 சுற்றுக்களும் வேண்டும் என தெரிவிக்கப்பட்டதால் 30–10–1993 முதல் புளியங்குடியிலிருந்து வடக்கு இலங் குளம் வழியாக சங்கரன்கோவிலுக்கு மேலும் 2 சுற்றுக்கள் வேறொரு பேருந்தைக் கொண்டு சிவகிரி வட்டாட்சியர் கூட்டிய சமாதான கூட்டத்தின் முடிவின்படி இயக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் இன்று காலையில் தொலைபேசி மூலமாக பஸ் இயக்கப்படுவதாக தகவல் வந்துவிட்டது. சட்டெனச் சொன்னால் சிட்டெனப் பறந்து செயல்படும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம் முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை ஏழாம் எண் மலைப்பாதை யில் வாகனங்கள் பழுதடைந்தால் போக்குவரத்துத் தடை ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு க. அர்ச்சுனன்.

திரு க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7 மலைப் பாதையில் வாகனங்கள் பழுதடைந்தால் ஏற்படும் போக்கு வரத்துத் தடை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தொப்பூர் அருகே மலைப்பாதையில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல், ஓசூர்— அதியமான்கோட்டை தொப்பூர்— மேட்டூர் செல்லும் நெடுஞ்சாலைகள் கூடுவதால்

போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. மலைப் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் இரவிலேயே ஏற்படுவதாலும், உடனடியாக மீட்புப்பணியில் ஈடுபட வாகன லாரிகள் இல்லாததாலும், இருபுறங்களிலும் இருந்து வரும் வாகனங்களை உடனடியாக திருப்பிவிட வசதியில்லாமல் இருபுறங்களிலும் மலைகளாகவும் அடர்ந்த வனப் பகுதியாகவும் இருப்பதாலும, வரும் வாகனங்கள் ஆங்காங்கேயே நிறுத்தப் படுகின்றன. தொப்பூர் காவல் நிலையத்தில் போதிய காவலர்கள் போக்குவரத்தைச் சீர் செய்து கொண்டு இருந்தாலும் வாகனங்களைக் கட்டுப்படுத்த இயலாத நேர்வுகளில் தொப்பூருக்கு அருகாமையில் உள்ள தீவட்டிப் பட்டி, மேச்சேரி மற்றும் தர்மபுரி காவல் நிலையங்களுக்கு தகவல் தந்து ஆங்காங்கே வாகனங்களை திருப்பி மாற்று வழியில் செல்ல ஏற்பாடு செய்யும்போது மாற்று வழிப்பாதைகள் மிகவும் மோசமாகவும், குறுகலாகவும் மிகவும் தொலை தூரமாகவும் இருப்பதாலும் வெளி மாநில ஓட்டுநர்கள் வாகனங்கள் பழுதடையக்கூடும் என அஞ்சி மேற்படி தேசிய நெடுஞ்சாலையிலேயே செல்வது நலம் எனக் கருதி சாலை யிலேயே வாகனங்களை நிறுத்திவிட்டு தூங்கிவிடுகின்றனர். இங்கு ஒரு வாகனம் பழுதாகிவிட்டால் அதனை வேறு பாதைக்கு மாற்ற இயலாது. சில சமயங்களில் பழுதடைந்த வாகனத்தை அகற்றுவதற்கு (Weeker) கொண்டு செல்ல இயலாத நிலை ஏற்படும். இது ஒரு குறுகிய பாதையாதலால் இந்த இன்னல் ஏற்படுகிறது. மேற்படி காரணங்களால் காலதாமதம் ஏற்படுகிறது.

2. போக்குவரத்தைச் சீர் செய்ய காவல்துறையினர் பின் வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் :

(1) தொப்பூர் மலைப்பாதையில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை போக்குவரத்தை ஒழுங்கு செய்ய போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் அடங்கிய காவலர்கள் குழு (காவல் உதவி ஆய்வாளர், 1, தலைமைக் காவலர் 1 மற்றும் காவலர்கள் 6) காவல் வாகனத்துடன் நியமிக்கப்பட்டு பணியாற்றி வர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

(2) போக்குவரத்தைக் கட்டுப்படுத்த சோதனைச் சாவடியை 3 இடங்களில் பிரித்து அமைக்க கோவையிலுள்ள வணிகவரித் துறைத் துணை ஆணையாளரிடம் காவல் கண்காணிப்பாளரும் மாவட்ட ஆட்சியரும் நேரடியாகப் பேசி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. த. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, இந்த விவர அறிக்கையில் அந்தக் காட்ரோட்டில் வாகனங்கள் பழுதடைந்து விடுகிறபோது காவல் துறையே

1993 அக்டோபர் 29] [திரு. க. அர்ச்சுணன்]

சேர்ந்து முயற்சி எடுத்தாலும் அதை அப்புறப்படுத்த, முடியாத சூழ்நிலைக் காரணமாகத்தான் அங்கே டிராபிக் ஸ்தம்பித்து விடுகிறது என்று இருக்கிறது. எனவே, தற்போது இருக்கின்ற பிரச்சினை சேலத்திலிருந்து வாணியம்பாடிக்கு, அரூர் வழியாக திருப்பத்தூர் வழியாக வருகிற சாலையை மேம்படுத்துவதன் மூலமாக, வாகனங்களையெல்லாம் இந்தப் பகுதியிலே திருப்பிவிடுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், எப்படியும் இந்த மலைப்பாதையில் மாற்றுப் பாதை அமைக்க முடியாத காரணத்தினால், இந்தப் பாதையை தேசிய நெடுஞ்சாலை அளவிற்கு உயர்த்தி இந்தப் பகுதி வழியாக அனைத்து வாகனங்களையும் திருப்பி விடுவதற்கான வாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துக்களை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சரோடு பேசி உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) திருநெல்வேலி மாவட்டத்தில் கீழப்பாவூர், ஆலங்குளம், சுரண்டை பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூர் ஆலங்குளம் சுரண்டைப் பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் தொடர்ந்து நோயினால் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.